1978 மார்ச் 8]

பாடி டி. வி. எஸ். நிறுவனங்களில் தொழில் தகராறுகள்.

*வின. 455— திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாடியிலுள்ள டி. வி. எஸ். நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

(ஆ) அந்த நடவடிக்கைகள் மூலம் மேற்படி தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டுவிட்டனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) பாடியிலுள்ள சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், லூகாஸ், டி. வி. எஸ். லிமிடெட், பிரேக்ஸ் இந்திய லிமிடெட் ஆகிய நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு சமரச பேச்சு வார்த்தைகள் சென்னை 2-வது வட்டத் தொழிலாளர் துறை துணை ஆணையாளர், தொழிலாளர் துறை ஆணையாளர், தொழிலாளர் நல அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் முன்னிலையில் மேற்கொள்ளப் பட்டன.

(ஆ) அரசினர் எடுத்த நடவடிக்கைகளின் பயனுக இத் தொழிற் தகராறுகள் தீர்க்கப்பட்டு தொழிற்சாலைகள் தற்போது அமைதியாக இயங்குகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, சஸ்பென்ஷன் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் மீது குற்றச் சாட்டுகளைப் பற்றி விசாரித்து முடிவு எடுத்து அந்த முடிவை முதலமைச்சர் அவர்களுக்கு முன் விடுவது என்றும், சஸ்பென்ஷன் பற்றி இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றும், உடனடியாக தொழிலாளர் நலத்துறை மூலமாக தொழிற்சங்கத் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்றும், கிளேட்டன் தொழிற்சாலையின் உற் பத்தியை ஆராய்ந்து ஊதியம் கொடுப்பது என்றும், அதற்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் முன் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டதே, அது என்ன வாயிற்று?

[1978, மார்ச் 8

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதற்குப் பின்னால் ஏற்பட்ட சூழ்நிலையை யொட்டி அமைதியாக தொழிற்சாலைகள் நடந்துகொண்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : இன்றைக்குத் தொழிற்சாலைகள் அமைதியாக நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால் அது சுடுகாட்டு அமைதி தான். அங்கேயுள்ள தொழிலாளர்களிடம் வற்புறுத்தி எழுதி வாங்கிக் கொண்டு அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறாமல் 15 தொழிலாளர்களையும் டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா ? இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அங்கே அமைதி நிலவுவதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. மேலும் அங்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி நான் விவரம் தரமுடியும். சுந்தரம் கிளேட்டனில் 61 பேர்கள் சஸ்பென்ஷன் செய்யப்பட்டார்கள், 29 பேர்கள் மீது நடவடிக்கை முடிவு செய்யப்பட்டுள்ளது, 8 பேர்கள் வேலைக்கு (ஜனவரி 13-ம் தேதி) திரும்பி வந்து விட்டார்கள், 8 பேர்கள் ரிஸைன் செய்து விட்டார்கள், 2 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்கள், 11 பேர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள், 8 பேர்கள் 'எக்ஸானரேட்' செய்யப்பட்டார்கள், 6 பேர்களுக்கு இன்கிரிமென்ட் கட் செய்யப்பட்டது, ஒருவருக்கு பனிஷ்மென்ட் என்ன என்று இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

ஹூகாஸ்.டி.வி. எஸ். தொழிற்சாலையில் 67 பேர்கள் சஸ்பென்ஷன் செய்யப்பட்டதில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை, அடுத்ததாக பிரேக்ஸ்-இந்தியா நிறுவனத்தில் பாதிக்கப்பட்ட 107 பேர்களில் 19 பேர்கள் மீது விசாரணை முடிந்திருக்கிறது. இரண்டு நாட்கள் சஸ்பென்ஷன் என்று இருந்ததே தண்டனை என்று முடிவு எடுக்கப்பட்டது, எண்பத்தி எட்டு பேர்கள் மீது நடவடிக்கை முடிவாகவில்லை.

Taxis and Auto-rickshaws in Madras City.

*Q. 456. **Thiru S. GANESAN** : Will the Hon. the Minister for Transport be pleased to state ;

(a) the total number of taxis and Auto-rickshaws now in Madras City; and

(b) whether they are in proportion to the population of Madras City ?